[27th April 1960

Opening of new Engineering Colleges

834 *Q.*—Sri A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் புதிய என்ஜினீயரிங் கல்லூரி அமைக்க உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்படியானல் எங்கே, எப்போது, என்ன செலவில் ?

(இ) தனியார் நிர்வாகத்திலா, அல்லது அரசாங்க நிர்வாகத்திலா ?

(ஈ) தனியார் முன்வந்தால் அரசாங்க உதவி கிடைக்குமா ? அப்படியானல், என்னென்ன உதவிகள் கிடைக்கும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM: அ, *to* ஈ. Yes, Sir. Proposals for opening some more private Engineering Colleges in the State are under examination. One-fourth of the total non-recurring cost (subject to a maximum of Rs. 7·75 lakhs) towards the opening of an Engineering College, by a private person or body, will be met by this Government ; the Central Government will bear half and the institution will have to bear ¼ of the expenditure. As regards recurring expenditure, this Government will bear half of the approved recurring net cost arrived at after deducting the college fees and grant paid by the Government of India from the expenditure (subject to a maximum of Rs. one lakh) during the Plan period and the same formula will continue to apply even after the Central grants cease to be received.

Sri A. VEDARATHNAM : எந்த எந்த இடங்களில் இன்ஜினீயரிங் கல்லூரிகள் ஏற்படுத்துவதாக அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அரசாங்கத்தினுடைய முடிவு சொல்லக்கூடிய நிலைமை வரவில்லை. சில இடங்களிலிருந்து விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன, அங்கே இன்ஜினீயரிங் காலேஜ்கள் ஏற்படுத்த வேண்டுமென்று.

Sri A. VEDARATHNAM : தஞ்சை ஜில்லாவிலிருந்து வேண்டுகோள் வந்திருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதுவரையிலும் வரவில்லை.

Sri M. K. SOMASUNDARAM : தூத்துக்குடி வி.ஓ.ஸி. காலேஜிலிருந்து என்ஜினீரிங் காலேஜ் துவக்க வேண்டுமென்று ஏதாவது மனு வந்திருக்கிறதா ? அதனுடைய பரிசீலனை எந்த நிலைமையில் இருக்கிறது ?

The Hon. Sri C. SUBRAMANIAM: வி.ஓ.ஸி. காலேஜிலிருந்து ஒரு விண்ணப்பம் வந்திருக்கிறது. அது பரிசீலனை நிலைமையில் இருக்கிறது.

Reforms in the examination system

* 835 Q.—Sri S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) பரீட்சை முறையை மாற்றி அமைக்க உத்தேசம் உண்டா ?

(ஆ) இது குறித்து மத்திய சர்க்கார் மாநில சர்க்காரின் ஆலோசனையைக் கேட்டார்களா ?

(இ) அப்படியாயின், மாநில சர்க்கார் அனுப்பிய பதிலின் விவரம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM: (அ) *to* (இ) The question of reform of examinations in general is being considered by the Government and point out that this system has to be given up and the

27th April 1960]

State Governments. This Government are co-operating in the Seminars and Conferences held on this subject. Concrete proposals in regard to the reform of the present system of examination have not so far emerged.

SRI S. M. ANNAMALAI : இப்படி பரீட்சை முறையை மாற்றி அமைப்பதற்கு உண்டான முக்கியமான காரணங்கள் யாவை ? எந்த அடிப்படையில் இந்த பரீட்சை முறையை மாற்றி அமைப்பதற்கு மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்கள் ?

THE HON SRI C. SUBRAMANIAM : இப்பொழுது இருக்கக் கூடிய பரீட்சை முறை பிரகாரம் கடைசியில் நடக்கக்கூடிய பரீட்சையில் கிடைக்கும் மார்க்குகளை வைத்துக்கொண்டு, அதன் அடிப்படையில்தான் தோல்வியும், தேர்வும் நிர்ணயிக்கப்படுகிறது. அது சரியான முறை அல்ல என்று சில பேர்கள் கருதுகிறார்கள். எந்த முறையில் அதை மாற்றி அமைக்க வேண்டுமென்பதுபற்றி இப்போழுது பரிசிலனை நடந்து கொண்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM: Sir, are the Government convinced that this one-word answer being used in the S.S.L.C. stages, only brings down the efficiency of the students. If so, will the Government take up this issue when they are being consulted by the Central Government and point out that this system has to be given up and the old system of answering questions in an essay form has to be reintroduced so as to raise the standard of the students ?

THE HON. SRI C. SUBRAMANIAM: It has already been taken up and we have given up this one-word answer.

SRI V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே, ஆண்டு முடிவில் நடக்கின்ற பரீட்சையில் பெறுகின்ற மார்க்குகளைக் கொண்டு முடிவு செய்வதை விட, மாதாமாதம் மாணவர்களுக்குப் பரீட்சை வைத்து, அந்தப் பரீட்சைகளில் வாங்கிய ஆவரேஜ் மார்க்கை வைத்துக் கொண்டு முடிவு செய்வது நல்ல முறையாக இருக்கும் அல்லவா ? அதே நேரத்தில் எல்லாப் பகுதிகளையும் மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்று இந்த அரசாங்கம் மத்திய அரசாங் கத்திற்கு ஆலோசனை கூறுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மேலாகப் பார்க்கும் பொழுது இது நல்ல முறையாகத்தான் இருக்கிறது. ஆனால், இப் பொழுது எஸ்.எஸ்.எல்.ஸி.யை எடுத்துக்கொண்டால் 1,000 பள்ளிகள் இருக்கின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் ஒவ்வொரு வாத்தியார் ஒவ்வொரு விதமாக மார்க்குப் போடலாம். அதைவைத்து 1,000 பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவர்களுடைய தகுதியை எப்படி சீர்தூக்கிப் பார்ப்பது ? அது முடியாத காரியமாக இருக்கிறது. இதெல் லாம்தான் இதில் இருக்கக்கூடிய சிக்கலான பிரச்னையாக இருக்கிறது. இது பற்றி ஆலோசனை நடந்துகொண்டிருக்கிறது.

SRI N. MARUDACHALAM : ஐந்தாம் வகுப்பு தேறிய மாணவர்கள் மறுபடியும் உயர்நிலைப் பள்ளிக்குப் போகும்பொழுது அவர் களுக்கு மறுபடியும் ஒரு பரீட்சை வைக்கப்படுகிறது. அந்தப் பரீட்சையில் பெயில் ஆன மாணவர்களுடைய மேல் படிப்பு படிக்க முடியாமல் கெட்டு விடுகிறது. ஐந்தாம் வகுப்பில் தேறிய மாணவர்களை மறுபடியும் பரீட்சை இல்லாமல் மேல் வகுப்பில் சேர்த்துக்கொள்ளுவதற்கு அரசாங்கம் முற் படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : படிப்பு இல்லாமலே இருந்து விடலாம். பாஸ் செய்த மாணவர்களின் படிப்பின் தகுதியின் அடிப்படையில்தான் இதை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது.

[27th April 1960

ஐந்தாவது வகுப்பிலிருந்து உயர்நிலைப் பள்ளிக்குப் போகும்பொழுது பல மாணவர்கள் அங்கே சேரவேண்டுமென்று விரும்புகின்ற காரணத்தினால், யாருக்குத் தகுதி அதிகமாக இருக்கிறதோ அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக இம்மாதிரி பரீட்சை வைக்கிறார்கள்.

Sri A. VEDARATHNAM : எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சையில் சில மாணவர்கள் ஏதாவது ஒரு பாடத்தில் ஒரு மார்க்கு, அல்லது இரண்டு மார்க்கு அதிகமாக வாங்கத் தவறியதன் காரணமாக அவர்கள் பரீட்சையில் தவறியவர்களாக கருதப்படுகிறார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ வி. கே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்ன பிரகாரம் மாதந்தோறும் பள்ளியில் நடத்தப்படும் பரீட்சைகளின் மார்க்குகளை அனுசரித்து, அவர்கள் நல்ல தகுதி உள்ளவர்களாக இருப்பார்களேயானால், அவர்கள் விஷயத்தில் இந்தச் சலுகையை காட்ட அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதற்காகத்தான் மாடரேஷன் என்ற முறை இருக்கிறது. இம்மாதிரி ஒன்றிரண்டு மார்க்குகள் குறைந்த அளவில் வாங்கியவர்களைப்பற்றி பரிசீலனை செய்து அவர்கள் பாஸ் செய்வதற்கு இடம் கொடுக்கப்படுகிறது. இதை எந்த அளவில் கொண்டுபோய் நிறுத்துவது என்பதுதான் இதில் இருக்கக் கூடிய கஷ்டம். ஒன்றிரண்டு மார்க்குக் குறைவு என்றால், அதற்குக் கீழே ஒன்றிரண்டு மார்க்குக் குறைவாக இருப்பவர்களையும் கவனிக்க வேண்டி வரும். ஆகவே, இதை ஒரே அளவில் நிறுத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது.

Sri P. G. MANICKAM : எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சைக்கு ஆஜர் ஆவதற்கு தலைமை உபாத்தியாயர் பரீட்சை நடத்தி வடிக்கட்டும் முறை தற்பொழுது அனுஷ்டிக்கப்படுகிறது. அதில் ஏதாவது மாறுதல் செய்வது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது வடிக்கட்டும் முறை அல்ல. ஸ்ரீ வி. கே. கிருஷ்ணமூர்த்தி மாதாமாதம் பரீட்சை வைக்க வேண்டுமென்று சொல்லுகிறார். ஆகையால் மூன்று மாதங்களுக்கு முன்னாலாவது ஒரு பரீட்சை வைத்தால்தான் மாணவர்கள் படிப்பதற்கு அவர்களைத் தூண்ட அனுகூலமாக இருக்கிறது. கடைசியில் படித்துக்கொள்ளலாம் என்று ஒதுக்கி வைத்துவிட்டு, பரீட்சைக்குப் படிக்காமல் போனால் பரீட்சையில் தோல்வி அடைபவர்கள் இன்னும் அதிகமாக இருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

Sri R. KRISHNASAMI NAIDU : மாணவர்களுக்குப் பரீட்சை வைக்கும் முறையைப் பற்றி பல வாத விவாதங்களும் கட்டுரைகளும் பத்திரிகைகளில் வெளிவந்துகொண்டிருந்த சமயம், டாக்டர் மு. வரதராசனார் ஆனந்த விகடன் பத்திரிகையில் தொடர்ச்சியாக இது பற்றி சில கட்டுரைகள் எழுதி வந்திருக்கிறார்கள். இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா, அல்லது அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்ததா ? அது பற்றி ஏதேனும் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : ஏதோ அம்மாதிரிக் கட்டுரைகள் வந்ததைப் பார்த்தேன். ஆனால் அது பற்றி இப்பொழுது ஞாபகம் இல்லை.

Sri V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே, மாணவர்களுடைய அறிவுத் திறன் இயல்பாக வளர்வதற்குத் தடையாக இருப்பது நோட்ஸ் ஆகும். இம்மாதிரி எல்லாப் பாடங்களுக்கும் நோட்ஸ் வெளிவருவதினால், மாணவர்கள் இயல்பாக தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள முடியவில்லை. ஆகவே, இந்த நோட்ஸ் அச்சிடப்பட்டு வெளியிடப்படுவதை அரசாங்கம் தடை செய்யுமா ?

27th April 1960]

THE HON. SRI C. SUBRAMANIAM: அதை எப்படித் தடுப்பது என்பதுதான் கஷ்டமாக இருக்கிறது. அது பற்றியும் சர்க்கார் பரிசீலனை செய்து, ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்படாத நிலையில் இருக்கிறது. இது மாதிரி ஒரு பிரசுரம் வெளியிடக் கூடாது என்று சொன்னால், அது தனிப்பட்டவர்களுடைய உரிமையைப் பாதிக்கும் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகையினால் அது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல.

Sports

* 836 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the steps taken by the Government to improve the standard of sports ; and

(*b*) whether any special attention has been paid to improve foot-ball game ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Government have constituted the Madras State Sports Council in July 1956 for the promotion of games and sports among the student and non-student population of this State. Financial assistance is given by the Council to the several State Associations controlling games and sports in the State, for coaching schemes, participation in National and International competitions and the conduct of the national competitions in the State. Republic Day games and Sports competitions for pupils of secondary schools (boys and girls) at the Educational District and the State levels have been introduced. From among those who distinguish themselves in these competitions are selected students to whom scholarships for study are given.

(*b*) No special action for improvement of the standard of the game of foot-ball has been taken.

SRI N. K. PALANISAMI: மற்ற தேசங்களைப் போல் விளையாட்டிலே திறமையுள்ளவர்களுக்கு உத்தியோகச் சலுகை கொடுத்து, மேலும் ஸ்போர்ட்ஸை இம்ப்ரூவ் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: வேலை செய்யக் கூடிய தகுதியும் அவர்களுக்கு இருக்க வேண்டும். வேலை செய்யக் கூடிய தகுதி இல்லாமல், விளையாட்டுத் திறமைக்காக மட்டும் வேலை கொடுக்க முடியாது. இரண்டு பேர்கள் பாஸ் செய்தவர்கள் இருக்கும்பொழுது, ஸ்போர்ட்ஸில் திறமையுள்ளவருக்கு வேலை கொடுப்பதற்கு இப்பொழுதே விதியில் இடம் இருக்கிறது.

SRI A. A. RASHEED: May I know whether encouragement will be given for the playing of marbles and tops also ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்த விளையாட்டுகளுக்கு நாம் ஒன்றும் உதவி செய்ய வேண்டியதில்லை. அவர்களே விளையாடிக் கொள்ளுவார்கள். திறமையும் தானாகவே வந்துவிடும்.

SRI K. B. S. MANI: இப்படிப்பட்ட விஷயங்களிலே கால் பந்து, ஹாக்கி விளையாட்டுப் போட்டிகளுக்காக நபர்களைப் பொறுக்குகின்ற கமிட்டியார் பார்ஷியாலிடி காட்டி சென்னையில் இருப்பவர்களுக்குத்தான் அதிக சலுகை கொடுக்கிறார்கள், வெளியிலிருப்பவர்களை தேர்ந்தெடுப்பதில்லை என்ற புகார்கள் வந்திருக்கின்றனவா ? அம்மாதிரி வந்திருந் தால் அதைப் பரிசீலித்து ஜில்லாக்களில் இருக்கும் விளையாட்டுகளில்